

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 24.09.2026


# மெகாவாட் பொய்கள் !

**“ரெண்டே பேருக்கு நடுவுலதான் போட்டியே! ஒன்னு மின்வெட்டு... இன்னொன்னு அரிவாள் வெட்டு!” என்று ஒரே போடாகப் போட்டார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்! நான்கு மாத ஆட்சி நான்கே சொற்களில் முடித்துவிடப்பட்டது.**

விஜய் ஆட்சிக்கு வந்தது முதல் வெளிச்சம் போய்விட்டது என்பதன் அடையாளமாக, எங்கும் எப்போதும் எல்லா ஊரிலும் எல்லா நேரத்திலும் மின்வெட்டு.மின்சாரம் கட்!

‘அஞ்சு கட்சி மாறிய அமாவாசையான’ இத்துறையின் அமைச்சர் நிர்மல்குமாருக்கு இதுபற்றிய கூச்சமே இல்லை. தனது துறையைக் கவனிக்கத் துப்பு இல்லாமல் அடுத்தவர் துறைக்கு எல்லாம் ஆளுக்கு முந்தி பதில் சொல்லித் திரிகிறார். எப்போதாவது மின்வெட்டு குறித்து பதில் சொல்ல முன்வந்தால் மெகாவாட் கணக்கில் பொய்களைச் சொல்கிறார்.

தமிழ்நாட்டில் மின்வெட்டே கிடையாது என்பார். ஆதாரத்துடன் கேள்வியை எழுப்பினால் பொய்மூட்டைகளை அவிழ்ப்பார்.

இதுவரை அவர் சொன்ன பொய்களைப் பாருங்கள்...

★ தி.மு.க.வினரால் மின்வெட்டு ஏற்படுத்தப்படுகிறது.

★ மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஒரு சில ஊழியர்களால் திட்டமிட்டு மின்வெட்டு ஏற்படுகிறது.

★ பியூஸ் கட்டையைத் திருடிச் சென்று விடுவதால் மின்வெட்டு ஏற்படுகிறது.

★ ஆமாம் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. அதனால் வெளிச்சந்தையில் மின்சாரம் வாங்க முயற்சித்து வருகிறோம்.

★ வெயில் அதிகமாக இருப்பதால் மின்சாரத் தேவை அதிகம் ஆகிவிட்டது.

★ மின்வெட்டைப் பெரிதாக்குகிறார்கள். பஞ்சாப் மாநிலத்தில் 14 மணி நேரம் மின்வெட்டு இருக்கிறது. பல மணிநேரம் மின்சாரம் இல்லாமல் அங்கு இருக்கிறார்கள்.

★ மின் துறை ஊழியர்கள் மத்தியில் 1 விழுக்காடு ஊழியர்கள் கருப்பு ஆடுகள். அவர்களால் மின்வெட்டு திட்டமிட்டு நடத்தப்படுகிறது.

இந்த வரிசையில் நேற்றைய தினம் ஒரு மெகா பொய்யைச் சொல்லி இருக்கிறார். “பி.எஸ்.என்.எல். கேபிள் பணிக்களுக்காகத் தோண்டுவதால் மின் வெட்டு ஏற்படுகிறது'' என்கிறார். நாடு முழுக்க பி.எஸ்.என்.எல். பணிக்காகத் தோண்டுகிறார்கள் என்றால் அத்துறைக்கு எத்தனை லட்சம் ஊழியர்கள் தேவை? ஊர் முழுக்க குண்டும் குழியுமாகக் கிடக்கிறதா? ஒட்டு மொத்தமாக தமிழ்நாட்டு மக்கள் காதில் பூ சுற்றுகிறார் அமைச்சர் நிர்மல்குமார்.

இவருக்கு முட்டுக் கொடுக்க வந்துள்ளார் இன்னொரு அமைச்சர் செங்கோட்டையன். அவர் என்ன சொன்னார் என்றால்...

★ காற்று அடிப்பது குறைவாக இருக்கிறது. அதனால் காற்றாலை மின்சாரம் கிடைக்கவில்லை.

★ வெளிசந்தையில் எங்கேயும் மின்சாரம் வாங்க முடியவில்லை. அதனால்தான் மின்சாரம் தட்டுப்பாடு என்கிறார் செங்கோட்டையன்.

இன்னொரு மகா புத்திசாலி இந்த அமைச்சரவையில் இருக்கிறார். ‘ஒரு ரூபாய் வாங்கிக் கொண்டு 49 ரூபாய் திருப்பித் தருகிறார்கள்’ என்று சொன்ன புத்திசாலி. ஆதவ் அர்ஜ"னா என்பது அவர் பெயர். இவர் ‘நான்கு கட்சி மாறிய அமாவாசை’. அவர் சொல்கிறார்...

“மழை குறைந்ததால் தண்ணீரில் இருந்து வரும் மின்சாரம் குறைந்திருக்கிறது. காற்று நின்று போனதால் அந்த மின்சாரமும் கிடைக்கவில்லை” என்று சொல்கிறார் ஆதவ் அர்ஜ"னா. இதைக் கல்வெட்டாக அடித்து அதற்கு கீழே ஆதவ் அர்ஜ"னா என்று போட்டால் காலா காலத்துக்கு பயன்படும், வழிகாட்டும் பொன்மொழி ஆகும். எவ்வளவு பெரிய புத்திசாலிகளை விஜய் தன்னைச் சுற்றி வைத்துள்ளார் என்பதற்கு உதாரணம் இவர்களது பேச்சுகள்.

**ஆட்சி நடத்த துப்பு இல்லை. திராணி இல்லை. மக்கள் தேவைகளை அறிந்து வழங்க அறிவு இல்லை. திறமை இல்லை. வாய்க்கு வந்த காரணத்தைச் சொல்கிறார்கள். ‘காரணம் சொல்பவன் காரியம் செய்ய மாட்டான்’ என்பது பழமொழி. அதைத்தான் பார்க்கிறோம்.**

த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டால் ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் இருளில் மூழ்கிக் கிடக்கிறது.முதலமைச்சரின் பெரம்பூர் தொகுதியே இருளில் கிடக்கிறது. மின்சாரம் போனால் நான்கு ஐந்து மணிநேரத்துக்கு வருவது இல்லை. குழந்தைகள், முதியோர், நோயாளிகள் பெரும் அவதிக்கு ஆளாகி வருகிறார்கள். வீட்டில் தூங்க முடியாமல் வாசலில் உட்கார்ந்து இருக்கிறார்கள் மக்கள். சாலை மறியல் செய்கிறார்கள். மின்வாரிய அலுவலகங்கள் பூட்டுப் போடப்பட்டுள்ளன. பொதுமக்களின் போன் அழைப்புகளை எடுக்க ஆள் இல்லை.மின்வாரிய அலுவலகங்கள் பொதுமக்களால் முற்றுகையிடப் படுகின்றன.

**பொதுமக்களுக்கு நிம்மதி போய்விட்டது என்றால் தொழில் துறையினருக்கு தொழிலே போய்விட்டது. தொடர் மின்வெட்டு காரணமாக தொழில் நிறுவனங்களை தொடர்ச்சியாக இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கோவை தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் நாள்தோறும் 10 கோடி ரூபாய் இழப்பு என்று செய்திகள் வெளியாகி உள்ளன. கோவையில் நாள் தோறும் 7 முதல் 10 முறை மின்வெட்டு ஏற்படுவதாக தொழில் துறையினர் தெரிவிக்கிறார்கள். தொடர் மின்வெட்டு காரணமாக மூலப்பொருள் வீணாகிறது. இயந்திரங்கள் பழுதடைகின்றன. தொழிலாளர்களுக்கு ஊதியம் தரப்படுகிறது, ஆனால் வேலை இல்லை என்கிற நிலைமை ஏற்படுகிறது.**

இப்படி ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் இருட்டில் தள்ளப்பட்டுள்ளது விஜய் ஆட்சியால்.ஏன் எங்கும் மின்சாரம் இல்லை என்றால், ஒரு அமைச்சர் தி.மு.க.வைக் குறை சொல்கிறார். இன்னொரு அமைச்சர் காற்றைக் குறை சொல்கிறார். மற்றொரு அமைச்சர் மழையையும் காற்றையும் குறை சொல்கிறார். இயற்கையையே சவாலுக்கு அழைக்கிறார்கள் சினிமாவைப் போல!

**ஆளத் தெரியாத விஜய் படம் நடிக்கப் போகலாம். அமைச்சர்கள் அவருக்கு கதை பண்ணப் போகலாம்!**

ஒன்றிய, மாநில அரசுகளின் தொழிலாளர் விரோத போக்கை கண்டித்து

# தொ.மு.ச. பேரவை சார்பில் சைதாப்பேட்டையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## தொ.மு.ச, தலைவர் கி.நடராசன் சிறப்புரையாற்றினார்!

சென்னை, செப்.24-

ஒன்றிய, மாநில அரசுகளின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத போக்கைக் கண்டித்து, தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை சார்பில் சைதாப்பேட்டை கலைஞர் பொன்விழா வளைவு அருகே நேற்று முன்தினம் (22.09.2026 - செவ்வாய் கிழமை) மாலை 4 மணியளவில், ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் சென்னை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் பொருளாளர் கண்ணன் வரவேற்றார்.

சென்னை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் சுந்தரமூர்த்தி கூட்டத் தலைவரை முன்மொழிந்தும், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளர் த.சரவணகுமார் கூட்டத் தலைவரை வழிமொழிந்தும் உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில் தொ.மு.ச. தலைவர் கி.நடராசன் சிறப்புரை ஆற்றினார்.

இக்கூட்டத்தில் மாநகர் போக்குவரத்து கழக ஊழிய முன்னேற்ற சங்க பொருளாளர் கி.சீனிவாசன், தலைமை நிலைய செயலாளர் அ.தங்கராஜ், நிர்வாக பணியாளர் சங்க பொதுச் செயலாளர் வி.மகேந்திரன், தொலைத் தொடர்பு தொ.மு.ச, டாஸ்மார்க் தொ.மு.ச, ஆட்டோ தொ.மு.ச, சலவை தொ.மு.ச, அங்கன்வாடி தொ.மு.ச, மின்வாரிய தொ.மு.ச, சென்னை மாநகராட்சி தொ.மு.ச, 108 ஆம்புலன்ஸ் தொ.மு.ச., அமைப்பு சாரா தொ.மு.ச. நிர்வாகிகள் மற்றும் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைமைச் சங்க நிர்வாகிகள், பணிமனைச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் என 2500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் தலைவர் எம்.எம்.சாமி நன்றியுரை ஆற்றினார்.

# ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




திருவள்ளூர் நகராட்சி 12-வது வார்டு மக்கள் முற்றுகை! அரிசி குடோனில்

# த.வெ.க. ஆட்சியில் வண்டுகளை கட்டுப்படுத்த மருந்து பற்றாக்குறை என அதிகாரிகள் விளக்கம்!

## ஒரு வாரத்திற்குள் நடவடிக்கை இல்லை என்றால் போராட்டம் – பொதுமக்கள் எச்சரிக்கை!

திருவள்ளூர், செப். 24-

திருவள்ளூர் புங்கத்தூரில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அரிசி குடோனில் இருந்து பரவி வரும் வண்டுகளால், சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் கடந்த மூன்று மாதங்களாக கடும் அவதிக்குள்ளாகி வருவதாகப் புகார் எழுந்துள்ளது. பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை எனக் கூறி, குடோன் அலுவலகத்தை பொதுமக்கள் முற்றுகையிட்டு அதிகாரிகளிடம் கோரிக்கை மனு அளித்தனர். திருவள்ளூர் நகராட்சி 12வது வார்டுக்கு உட்பட்ட பத்தியால் பேட்டை, கண்ணதாசன் நகர், மகாவீர் அவென்யூ, ஜெய் நகர், ஜெயா நகர் உள்ளிட்ட பகுதிகளில் வண்டுகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.



அரிசி குடோனில் இருந்து பரவும் சிறு வண்டுகள் வீடுகள் முழுவதும் நிறைந்து காணப்படுவதாகவும், இரவு நேரங்களில் குழந்தை கள் மற்றும் பெரியவர்களின் காதுகளில் வண்டுகள் நுழைந்து பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

மேலும், வீடுகளில் உள்ள உணவுப் பொருட்களில் வண்டுகள் நிறைந்து காணப்படுவதால், உணவைப் பாதுகாப்பாகப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. துர்நாற்றம், உடல் அரிப்பு உள்ளிட்ட உடல் உபாதைகளும் ஏற்படுவதாக மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். சுமார் ஒரு கிலோ மீட்டர் சுற்றளவில் வண்டுகளின் பாதிப்பு இருப்பதாகத் தெரிவிக்கும் பொதுமக்கள், இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். இதுதொடர்பாக குடோன் நிர்வாகத்திடம் நேரிலும், தொலைபேசி வாயிலாகவும் பல முறை புகார்கள் அளித்தும், இது வரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து, திருவள்ளூர் நகர்மன்ற திமுக உறுப்பினர் ராஜ்குமார் என்கிற தாமஸ் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் இணைந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலகத்தை முற்றுகையிட்டனர். தொடர்ந்து, தர ஆய்வாளர் ஆர். மாதவனிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. அதில், பொதுமக்களின் உடல்நலனைப் பாதிக்கும் வண்டுகளை முற்றிலும் ஒழிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. முற்றுகையின்போது, த.வெ.க. ஆட்சி அமைந்த பிறகு கடந்த மூன்று மாதங்களாக வண்டுகளை ஒழிப்பதற்கான மருந்து வரவில்லை என அதிகாரிகள் தெரிவித்ததாக பொதுமக்கள் கூறினர். இதனால், வண்டுகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளதாகக் கூறப்படும் நிலையில், பொதுமக்களின் சுகாதாரப் பிரச்சினையில் அரசு நிர்வாகம் உரிய கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் வலியுறுத்தினர்.

பொதுமக்களின் புகார் தொடர்பாக ஒரு வாரத்திற்குள் வண்டுகளை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் உறுதி அளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அதிகாரிகள் அளித்த உறுதியைத் தொடர்ந்து தற்போது கலைந்து செல்வதாகவும், குறிப்பிட்ட காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் பொதுமக்களைத் திரட்டி மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும் என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் எச்சரித்தனர்.

மதச்சார்பின்மைக்கு முரணான

# ‘வந்தேமாதரம்’ பாடலை முழுவதும் பாடாவிட்டால் தண்டனை விதிக்கக்கூடாது!

## உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு!

கர்நாடகா,செப்.24-

வந்தே மாதரம் பாடலை முழுமையாகப் பாடாவிட்டால் தண்டனை விதிக்கக் கூடாது என்று உச்ச நீதி மன்றம் அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

வந்தே மாதம் பாடலின் ஆறு சரணங்களையும் கட்டாயம் பாட வேண்டும் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு பிறப்பித்த சுற்றறிக்கை மற்றும் அப்பாடலுக்குத் தேசிய கீதத்துக்கு இணையான அந்தஸ்து வழங்கும் சமீபத்திய சட்டத் திருத்தத்தை எதிர்த்து கர்நாடக இசைப் பாடகர் டி. எம்.கிருஷ்ணா உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

அவர் தாக்கல் செய்த மனுவில், வந்தே மாதரம் பாடலின் முதல் நான்கு சரணங்கள் இந்து தெய்வங்களை உணர்வை வெளிப்படையாக வலியுறுத்துகின்றன. எனவே, அப்பகுதிகளைக் கட்டாயம் பாட வேண்டும் என்று உத்தரவிடுவது நாட்டின் மதச்சார்



பற்ற தன்மைக்கு முரணானது என்று மனுவில் தெரிவித்திருந்தார்.

இந்த மனுவை மூத்த வழக்குரைஞர் தாக்கல் செய்தார்.

வந்தே மாதரம் ஆறு சரணங்களையும் பாடுவதைக் கட்டாயமாக்கும் தண்டனைச் சட்டத்தை எதிர்த்து கர்நாடக இசைப் பாடகர் டி.எம்.கிருஷ்ணா தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உச்ச நீதி மன்ற அமர்வு, வந்தே மாதரம் பாடலை முழுமையாகப் பாடாவிட்டால் தண்டனை விதிக்கக் கூடாது, தண்டனை என்பதை மாற்ற அடிப்படை உரிமை விதியின் கீழ் பரிசீலிக்கலாம் எனத் தெரிவித்து கர்நாடக இசைக் கலைஞர் டி.எம். கிருஷ்ணா தொடர்ந்த வழக்கில் ஒன்றிய அரசு உரிய விளக்கம் அளிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் கிழக்கு ஒன்றியம், குமாரபாளையம் ஊராட்சி, வடுகப்பட்டியில் திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் மூலனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் ப.பழனிசாமி, திண்டுக்கல் மேற்கு மாவட்ட பொருளாளர் விஜயன், ஒன்றிய கழக செயலாளர்கள் பி.சி.தங்கம், கே.சி.பாலு, ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் நா. செல்லமுத்து, பேரூராட்சி தலைவர் சிக்கந்தர் பாட்ஷா உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.